

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஆகஸ்டு 25, 2022 | புரட்சி 21 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00

### பெரியார் – அண்ணா – கலைஞர் நினைவிடங்களில்

# அர்ச்சகர்கள் தமிழ்ப் பாசுரம் பாடி மரியாதை

*தமிழக முதல்வர் அனைத்து இந்துக்களும் பயிற்சி பெறக் கூடிய 9 பயிற்சிப் பள்ளிகளை காணொளி வாயிலாகத் தொடங்கி வைத்தார். உண்டு – உறைவிடப் பள்ளிகளாகச் செயல்படும்; ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.3000/– உதவித் தொகை வழங்கப்படும்; சமயபுரத்தில் புதிய ஓதுவார் பயிற்சிப் பள்ளியையும் முதல்வர் திறந்து வைத்தார்.*

*அனைத்து இந்துக்களையும் அர்ச்சகராக நியமித்து தமிழக முதல்வர் ஆணை பிறப்பித்த ஓராண்டு நினைவாக (ஆக. 14) பயிற்சி பெற்ற அர்ச்சகர்கள் பெரியார், அம்பேத்கர், அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் மரியாதை செலுத்தினர். தமிழில் அர்ச்சனைப் பாடல்களைப் பாடினர். இது குறித்து சங்கத் தலைவர் வா. அரங்கநாதன் விடுத்துள்ள அறிக்கை:*

இந்திய வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய நாள் ஆகஸ்ட் 14, 2021. பல்லாயிரம் ஆண்டு தமிழக வரலாற்றில் கடந்த 50 ஆண்டுகால திராவிட இயக்க ஆட்சிதான் மகத்தானது. மன்னர்களின் ஆட்சிகளைவிட, சமத்துவம், சமூகநீதி என்ற விளிம்புநிலை மக்களை மையப்படுத்திய கோட்பாடுகள் ஆட்சி அதிகாரத்திலும் விதைக்கப்பட்டு வளர்ந்து செழித்த காலமிது.

சமூகத்தின் மிக முக்கிய அதிகார மையமான கோயில் கருவறையில் 2000 ஆண்டுகளாக நிலவி வந்த பார்ப்பனிய மேலாண்மை அடிப்படையிலான கருவறை தீண்டாமை இருள் அகற்றப்பட்ட காலமும் இதுதான்.

திமுக ஆட்சியில் பல சாதனைகள் இருந்தாலும், கருவறைத் தீண்டாமையை அகற்ற எடுத்த முயற்சியே வரலாறு போற்றும் நிகழ்வு. அனைத்து சாதி அர்ச்சகர் நியமனம் நிகழ்ந்து ஆக.14 அன்று, ஓராண்டு நிறைவடைகிறது. அர்ச்சகர் நியமனத்திற்காக பெரும் முயற்சியெடுத்த சமூக நீதிக் காவலர் அய்யா முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை இன்னாளில் நினைவு கூர்கிறோம். கலைஞரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்துகிறோம்.

ஓராண்டிற்கு முன்பு இந்நாளில் அர்ச்சகர் பணிநியமனம் செய்த தமிழக முதல்வர் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எங்களுடைய அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம் சார்பாகவும், அரசு கோயில் அர்ச்சகர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். முதல்வரின் தளபதியாக நின்று வென்று காட்டிய செயல்வீரர் இந்து சமய அறநிலை துறை அமைச்சர் சேகர்பாபு, இந்து சமய அறநிலைத்துறை செயலாளர் சந்திரமோகன், குமரகுருபன் ஆணையர், எங்களுடன் கடந்த 15 ஆண்டுகளாக இணைந்து போராடி வரும் முற்போக்கு அமைப்புத் தோழர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



**வழக்கில் ஆகமக் கோயில் பார்ப்பனருக்கு, ஆகமம் அல்லாத கோயில்கள் சூத்திர, பஞ்சமருக்கு எனப் பிரிக்கும் முயற்சிகள் நடக்கிறது. இதை தமிழக அரசு அனுமதிக்க கூடாது. தமிழக வரலாற்றில் முதல்முறையாக வடநாட்டவர் பலர் அர்ச்சகர் வழக்கில் இணைந்திருப்பது, அதை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டிருப்பது என்பதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது.**

நம்மை கவலை கொள்ளச் செய்யும் விசயங்களும் நடந்து வருவதை இந்நாளில் பரிசீலிக்க வேண்டியுள்ளது. அர்ச்சகர் நியமனம், விதிகள், இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தை எதிர்த்து 25-க்கும் மேலான வழக்குகள் தொடுக்கப்பட்டு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. வழக்கில் ஆகமக் கோயில் பார்ப்பனருக்கு, ஆகமம் அல்லாத கோயில்கள் சூத்திர, பஞ்சமருக்கு எனப் பிரிக்கும் முயற்சிகள் நடக்கிறது.

இதை தமிழக அரசு அனுமதிக்க கூடாது.தமிழக வரலாற்றில் முதல்முறையாக வடநாட்டவர் பலர் அர்ச்சகர் வழக்கில் இணைந்திருப்பது, அதை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டிருப்பது என்பதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது.

இரண்டாவதாக, அரசு கோயில் அனைத்து சாதி அர்ச்சகர்களை ஏற்கனவே கோயிலில் உள்ள பார்ப்பனர்கள் நடத்தும் விதம் மிக மோசமாக உள்ளது.100 பார்ப்பனர்கள் இருக்கும் இடத்தில் ஒரு தமிழ் அர்ச்சகரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எனவே தமிழக அரசு உடனே அறிவித்தபடி அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க வேண்டும்.

அனைத்து சாதி மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். இட ஒதுக்கீடு அடிப்படையில் கோயில்களில் அர்ச்சகர் பணிநியமனம் நடைபெற வேண்டும். மூன்றாவதாக, எங்களுடன் படித்த 100-க்கும் மேலான மாணவர்கள் அதிமுக அரசின் வஞ்சகத்தால் பணி நியமனம் இன்றி வாடி வருகின்றனர்.

வயது வரம்பைத் தளர்த்தி இவர்களுக்கு உடனே பணிநியமனம் வழங்க வேண்டும். இன்றுவரை மதுரை மீனாட்சியம்மன், திருச்செந்தூர், பழனி முருகன் கோயில்கள், திருவரங்கம் அரங்கநாதன், சென்னை கபாலீசுவரர் கோயில்களில் தமிழ் சமுதாயத்தின் தேவர் , கவுண்டர், யாதவர், வன்னியர், செட்டியார், பிள்ளை, ஆதிதிராவிடர் உள்ளிட்டோர் கோயில் கருவறையில் நுழைய முடியவில்லை என்பது கடும் வேதனைக்குரியது. அரசியல் சட்டத்தின் ஆட்சி என்பதற்கான சவால் இது.

எனவே இந்நாளில் சமத்துவ, சமூகநீதி தமிழக முதல்வர் அவர்கள் தமிழ் மக்கள் பணத்தில் கட்டப்பட்ட கோயில்களில் தமிழர்களை, தமிழை நிலைபெறச் செய்ய வேண்டுகிறோம்.

# கழக சார்பில் காவல்துறையிடம் மனு: “கிடுகு” (சங்கிகளின் கூட்டம்) திரைப்படத்தை வெளியிட தடை போட வேண்டும்

ஜாதி, மத மோதல்களை உருவாக்க முயற்சிக்கும் ‘கிடுகு’ திரைப்படத் தயாரிப்பாளர் ராமலட்சுமி, இயக்குனர் வீரமுருகன் ஆகியோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 22.08.22 திங்கள் காலை சென்னை காவல் ஆணையர் அவர்களிடம் மனு அளிக்கப்பட்டது.

கிடுகு (சங்கிகளின்கூட்டம்) எனும் பெயரில் ஒரு திரைப்படத்தின் முன்னோட்ட காட்சி ஒன்று வெளியாகி உள்ளது. ராமலட்சுமி என்பவர் தயாரிப்பில் வீரமுருகன் என்பவர் இயக்கத்தில் இத்திரைப்படம் தயாரிக்கப் பட்டுள்ளது.

இதில் சில காட்சிகளில் தமிழ்நாட்டு அரசின் திராவிட மாடல் குறித்து பொய்யான தகவல்களைக் கூறி அவதூறு பேசும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட ஜாதியினரை உயர்த்திக் காட்டும்படியான காட்சிகளும் குறிப்பிட்ட மதங்கள் மீது வெறுப்பு ஏற்படுத்தும் வகையிலும்,



‘ராமசாமி நாயக்கருக்கு’ எதுக்கு சிலை என்று வன்முறையை தூண்டும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி என்று ஒருவர் ஆவேசமாகப் பேசி, தமிழ் மண்ணை காவி மயமாக்காமல் விட மாட்டேன் என்று வன்முறையை தூண்டுகிறார். காவல்துறை அதிகாரி ஒருவரே ‘திராவிடன்’ என்ற சொல்லை ஏளனம் செய்கிறார். பெண்களை இழிவுபடுத்தும் காட்சிகளும், தாலியை பெண்கள் அகற்றுவதை கொச்சைப்படுத்தும் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

சட்டம் ஒழுங்கிற்கு பிரச்சனை ஏற்படுத்தி, மத நல்லிணக்கத்தை கெடுத்து, பொதுஅமைதியை சீர்குலைக்கும் நோக்கோடு வெளியிடப்பட உள்ள “கிடுகு” எனும் திரைப்படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும்.

மத மற்றும் ஜாதி மோதல்களை உருவாக்க முயற்சிக்கும் அதன் தயாரிப்பாளர் ராமலட்சுமி மீதும், இப்படத்தை இயக்கும் வீர முருகன் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம் என விண்ணப்பத்தில் கோரிக்கை வைக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, சுகுமார், வேழவேந்தன் ராஜேஷ் ஆகியோர் பங்கேற்றனர். உமாபதி செய்தியாளர்களிடம் படத்தின் உள்ளடக்கத்தை விளக்கினார்.

**தலையங்கம்**

# ‘ஆகமம்’ மாற்றவே முடியாததா?

அனைத்து இந்துக்களும் அர்ச்சகர் ஆக முடியும்; அவர்கள் உரிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்ற சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் ஓராண்டுக்கு முன் (ஆக.14, 2021) தமிழக அரசு உரியப் பயிற்சி பெற்ற அனைத்து ஜாதியினர் 27 பேருக்கு அர்ச்சகர் நியமன ஆணை பிறப்பித்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிலான அமர்வு, அர்ச்சகர் பதவிக்கு வயது வரம்பு, உரிய பயிற்சி தேவை என்ற அரசு பிறப்பித்த விதியை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், ஆகம முறை பின்பற்றப்படாத கோயில்களுக்கு மட்டுமே இது பொருந்தும் என்று கூறியதோடு ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோயில்களுக்கு அந்தந்த ஆகமம் கூறும் முறையில் தான் வழிபாடு, சடங்குகள் மட்டுமல்ல; அர்ச்சகர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறிவிட்டது. எந்தெந்த ஆகம கோயில்களில் எந்த வகை ஆகமம் பின்பற்றப்படுகிறது என்பதைக் கண்டறிய 5 பேர் கொண்ட குழுவும் அமைத்து அதில் இருவர் பெயரையும் நீதிமன்றமே பரிந்துரைத்துள்ளது.

அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்கிறது அரசியல் சட்டம்; ஆனால் ஆகமம் அதை ஏற்கவில்லை. அர்ச்சகர் பதவியை பாரம்பரிய சொத்தாகவே பார்ப்பனர்கள் வைத்திருந்தனர். பாரம்பரிய முறை செல்லாது என்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் (1971) ஏற்கனவே பார்ப்பன உட்பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் அதை மாற்றியமைக்க முடியாது; அது ஆகம விரோதம் என்று கூறிவிட்டது.

தீண்டப்படாதவர்கள் கோயிலுக்குள் நுழைவதே ஆகமத்துக்கு எதிரானது தான். ஆகமத்துக்கு எதிராக சட்டம் வந்தது. கோயில்களில் இரவு பூஜை நடத்தும் உரிமை ஆகமப்படி கோயிலில் உள்ள தேவதாசிகளுக்கு மட்டுமே உண்டு என்கிறது ஆகமம். தேவதாசி முறை ஒழிக்கப்பட்டு ஆகமம் மாற்றியமைக்கப்பட்டது. காலத்தின் தேவைக்கு ஏற்ப ஏன் அனைத்து இந்துக்களும் இந்துக் கோயில்களில் உரிய பயிற்சி பெற்று அர்ச்சகராகலாம் என்று ஆகமத்தை மாற்றினால் என்ன குடி முழுகிப் போகும்? ஏற்கனவே எந்தெந்தக் கோயில்களில ஆகமங்கள் எப்படி மீறப்பட்டு வருகின்றன என்று நீதிபதி மகாராசன் குழுவும் நீதிபதி ஏ.கே. ராஜன் குழுவும் பட்டிய லிட்டுள்ளதே; அதனால் கோயிலுக்கள் இருந்த கடவுள்கள் கோயிலை விட்டு ஓடிப் போய் விட்டார்களா?

இந்துக்களின் ஒற்றுமை; இந்துக்களின் பண்பாடு பற்றி எல்லாம் பேசுகிறவர்கள் அர்ச்சகர் ஆகும் உரிமை மட்டும் அனைத்து இந்துக்களுக்கும் கிடையாது என்று கூறுவதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட ஜாதி இந்துக்களை இது புண்படுத்தாதா? அவமானப்படுத்தாதா?

கடவுளையும் அதற்கு இருப்பதாகக் கூறப்படும் சக்தியையும் தங்களது பூணூலுக்குள் முடிச்சுப் போட்டுக் கொண்டு கடவுளிடம் நெருங்கும் தகுதி தங்களுக்கே உண்டு என்று கூறுவதைவிட பாசிசம் வேறு ஏதாவது இருக்க முடியுமா? என்று கேட்கிறோம்.

தமிழக முதல்வர் அனைத்து இந்துக்களையும் அர்ச்சகராக்கும் சமூகப் புரட்சியில் மிகவும் உறுதியாக இருப்பதோடு 9 புதிய அர்ச்சகர் பள்ளிகளையும் திறந்துள்ளார். ஆனால், ஆகமம் பின்பற்றப்படாத கோயில்களில் அர்ச்சகர் ஆவது என்றால் அது வேலை வாய்ப்பு பிரச்சினையாகி விடும். பெரியார் அந்தக் கண்ணோட்டத்தில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவும் இல்லை. ‘ஆகமம்’ பின்பற்றப்படும் கோயில்களில் உள்ள பார்ப்பன மேலாதிக்கத்தைத் தகர்த்து அங்கே ‘சூத்திரன்’ பூஜை செய்தால் கருவறை தீட்டாகி விடும் என்ற தீண்டாமை இழிவை துடைத்து எறியவே பெரியார் இந்த இயக்கத்தை முன்னெடுத்தார்; கலைஞர் வழி மொழிந்தார்.

இந்த இலட்சியம் நோக்கி சட்டப் போராட்டம் – மக்களை அணி திரட்டும் போராட்டம் இரண்டுமே தேவைப்படுகிறது. கலைஞர் கூறியதுபோல் பெரியார் நெஞ்சில் தைத்த முள் அகற்றப்படும் வரை இதை முன்னெடுப்போம்; சனாதனிகளின் முகத்திரையையும் மக்கள் மன்றத்தில் கிழித்தெறிவோம்!

# 8 ஆண்டுகளில் 23 பொதுத் துறைகளை விற்ற மோடி ஆட்சி

தனது ஆட்சிக் காலத்தில் புதிதாக ஒரு பொதுத்துறையைக் கூட உருவாக்காத பிரதமர் என்றால் அது இன்றைய பிரதமர் நரேந்திர மோடிதான் என்று காங்கிரஸ் எம்.பி.ரிபுன் போரா, கடந்த பிப்ரவரி மாதம் நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசியிருந்தார். அதுமட்டுமல்லாமல், தனது 8 ஆண்டு ஆட்சியில் 23 பொதுத்துறை நிறுவனங்களை மோடி அரசு விற்றுத் தீர்த்துவிட்டது என்றும் அதிர்ச்சிகரமான புள்ளிவிவரங்களை வெளி யிட்டிருந்தார். அவரின் அந்த புள்ளிவிவரங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் திடீரென டிரெண்ட் ஆகி வருகின்றன. நாட்டின் 75-ஆவது சுதந்திர தின நிறைவை யொட்டி, பாஜக, சங்-பரிவாரக் கூட்டத்தினர் மட்டுமே தேசபக்தர்கள் என்பது போலவும், நாட்டின் 8 ஆண்டுகளில் பல மடங்கு முன்னேற்றி இருப்பதாகவும் விளம்பரங்களை செய்து வருகின்றனர். சமூக வலைத்தளங்களில் இளைஞர்கள் கடும் விமர்சனத்தை முன்னெடுத்துள்ளனர். பிப்ரவரி மாதம் ரிபுன் போரா பேசிய தகவல்களுடன், கூடுதல் புள்ளி விவரங்களை இணைத்து பதிலடி கொடுத்து வருகின்றனர்.




சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு தனது 16 ஆண்டு ஆட்சிக் காலத்தில் மொத்தம் 33 பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கினார். நேருவுக்கு அடுத்து பிரதமராகப் பதவியேற்ற லால் பகதூர் சாஸ்திரி ஒரே ஆண்டிற்குள் 5 பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கினார். நாட்டின் மூன்றாவது பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 1966 முதல் 1977 வரையும், பின்னர் 1980 முதல் 1984 வரையும் பிரதமராக இருந்த இந்திரா காந்தி சாதனையின் உச்சமாக 66 பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கினார். ராஜீவ் காந்தி 1984 முதல் 1989 ஆம் ஆண்டுகளை வரையிலான காலத்தில் 16 பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கினார். 1989 முதல் 1990 வரை வெறும் ஓராண்டு மட்டும் பிரதமராக இருந்த ஜனதா தளம் கட்சித் தலைவர் வி.பி.சிங் 2 பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கினார். இவர்கள் யாருமே ஒரு பொதுத்துறை நிறுவனங்களை தனியா ருக்கு விற்கவில்லை.

இந்தியாவில் புதிய தனியார்மய - தாராளமய உலகமயக் கொள்கையை அறிமுகப்படுத்திய பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூட, 1991 முதல் 1996 வரையிலான காலத்தில் 14 பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கினாரே தவிர, விற்பனையில் இறங்கவில்லை. ஐக்கிய முன்னணி கூட்டணி சார்பில் பிரதமரான ஐ.கே.குஜ்ரால் காலத்தில் 1997 முதல் 1998 வரை 3 பொதுத் துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. ஒன்றும் தனியாருக்கு விற்கப்படவில்லை. ஆனால், பாஜக சார்பில் முதன்முதலாக பிரத மரான அடல் பிகாரி வாஜ்பாய், 1998 முதல் 2004-க்குள் 7 பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்றார். பொதுத் துறைகளை விற்பதற்கென்றே தனி அமைச்சரை (அருண் ஷோரி) நியமித்த பெருமையும் வாஜ்பாயையே சாரும். எனினும்கூட அவரது ஆட்சியில், 17 பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கியதாக ஒரு கணக்கு கூறுகிறது.

நிதியமைச்சராக இருந்து தனியார்மயம், தாராளமயம், உலகமயக் கொள்கையை நரசிம்மராவ் அமல்படுத்துவதற்கு காரணமாக இருந்தவரும், 2004 முதல் 2014 வரை 10 ஆண்டுகள் இந்தியாவின் பிரதமராக இருந்த வருமான மன்மோகன் சிங், தனது பதவிக் காலத்தில் 3 பொதுத் துறை நிறுவனங்களை தனி யாருக்கு தாரை வார்த்தார். மறுபுறத்தில் 23 பொதுத்துறை நிறுவனங்களைஉருவாக்கினார். ஆனால், 2014-ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 8 ஆண்டுகளுக்கும் மேலாக பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி இதுவரையில் ஒரு பொதுத் துறை நிறுவனத்தைக் கூட புதிதாக உருவாக்க வில்லை. ஆனால் 23 நிறுவனங்களை தனியாருக்கு விற்று முடித்துள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் இளைஞர்கள் புள்ளி விவரங்களை வெளியிட்டு பாஜக அரசின் லட்சணத்தை அம்பலப்படுத்தி வருகின்றனர். ஒட்டுமொத்தமாக பாஜக ஆட்சியில் மட்டும் 30-க்கும் மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்றுள்ளதாக கடுமையாகச் சாடி வருகின்றனர்.

## 93% நிர்வாக இயக்குனர்கள் ‘அவாள்களே’!

‘இலவசங்கள்’ குறித்து திரு புகழ் காந்தி ஓர் அருமையான கட்டுரையை ஆங்கில ‘இந்து’ (ஆக.20, 2022) வில் எழுதியிருக்கிறார். அதில் வரும் சில முக்கியமான விவரங்கள்:


இந்தியாவின் மொத்த சொத்தில் 22%ஐ மேல் தட்டில் இருக்கும் 1%வைத்திருக்கிறார்கள். அதே போல் 57% சொத்துக்களை மேலடுக்கில் இருக்கும் 10% பேர் வைத்திருக்கின்றனர். உயர் ஜாதிக் குடும்பங்கள் தேசிய வருமானத்தின் சராசரியை விட 47% அதிகம் ஈட்டுகிறார்கள். பெரும் தொழில் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர்களில் (Board Members) 93% உயர் ஜாதியினர். நடுத்தர, சிறு, குறு தொழில் நிறுவனங்களில் 63% நிர்வாகிகள் உயர் ஜாதியினர்.

தொழில் நிறுவனங்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படும் வரிச் சலுகைகள் 5 லட்சம் கோடி. இதனால் அரசுக்கு சென்ற வருடம் இழப்பு 1.84 லட்சம் கோடி. அடுத்த வருடம் இது ஒரு லட்சம் கோடியாக இருக்கும். இதன் பலன் பெரும்பாலும் உயர் ஜாதியினருக்குத்தான் (பார்ப்பனருக்குத்தான்). சரி, தமிழகத்தில் வழங்கப் படும் மூன்று இலவசங்களுக்கான செலவு என்ன?

கலர் டிவி 750 கோடி; பெண்களுக்கான இலவச பஸ் பயணம் 1250 கோடி; மதிய உணவுத் திட்டம் 1823 கோடி; மொத்தம்: 3823 கோடி. ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். இதன் பலன்கள் பெரும்பாலும் ஜாதி, வர்க்க அடுக்கில் கீழ் நிலையில் இருப்பவர்களுக்குத்தான்.

இந்தியாவின் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையினால் அதிகம் பலனடைந்தவர்கள் (பார்ப்பனர்) உயர் ஜாதியினர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. எனவே சாதியா, வர்க்கமா என்று மயிர் பிளக்கும் வாதங்களை நடத்துபவர்கள் வெறும் கையால் முழம் போடாமல் இத்தகைய உண்மைகளை வைத்துப் பேசினால் தெளிவு கிடைக்கும். மேற்கோள்களை ஃபார்முலா போல் ஒப்பித்துக் கொண்டே இருந்தால் மக்களின் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. ஸ்தூலமான நிலைகளை ஸ்தூலமாக ஆய்வு செய்யுங்கள் என்று லெனின் சொன்னது இதைத்தான்.

## ஆகமம் மாற்றத்துக்கு உரியதே!



‘ஆகமம்’ என்பதன் பொருள் ‘ஒரு ஏற்பாடு’ என்பதுதானே ஒழிய அதற்கு வேறு பொருளொன்றும் இல்லை. ஏற்பாடு என்பவை யெல்லாம் காலத்திற்கு, நிலைமைக்கு ஏற்றவைகளே ஒழிய முக்காலத்திற்கும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றவையல்ல. மற்றும் எந்த ஏற்பாடும் மனிதனால் செய்யப்படுபவை. ஆகமம் என்னும் சொல்லைப் போலவே ‘அய்தீகம்’ என்னும் தன்மையும் உண்டு. அய்தீகம் என்பதற்குப் பொருள் ஆதாரமில்லாமல் தொன்று தொட்டு நடந்துவரும், சொல்லி வரும் விஷயங்களுக்குச் சொல்லும் சொல்லாகும்.

‘விடுதலை’ 29.11.1969

## பட்டியலிட்டார் பால் பிரபாகரன் (2)

# பெரியார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள்

***முதலில் மதத்தில் இருந்து தமிழை பிரிக்க வேண்டும் என்றார். அடுத்ததாக வட மொழியில் இருந்து தமிழைப் பிரிக்க வேண்டும் என்கிறார் பெரியார்.***

ஒரு மொழி என்பது எளிமையாக கற்றுக் கொள்ள முடிகிற அளவிற்கு இருக்க வேண்டும். மிக கடினப்பட்டு படிக்கின்றவாறு இருக்கக் கூடாது. அப்படி எளிமையாக கற்றுக் கொள்ளு மாறு இருந்தால் தான் ஒரு மொழி மக்கள் மத்தியில் வேகமாக வளர்ச்சியடையும். ஆங்கிலத் தில் வெறும் 26 எழுத்துதான் ஆனால் உலக அளவில் வளர்ச்சி அடைந்து சென்று விட்டது. ஆனால் தமிழில் 247 எழுத்துகள் உள்ளன. 247 எழுத்து உள்ள தமிழில் என்ன அறிவியல் நூல்கள் இருக்கின்றன? எதுவும் இல்லை. குறிப்பாக படிப்பதற்குக்கூட கடினமாக உள்ளது. மொழி என்பது ஒவ்வொரு நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப உருவாகக் கூடியது.

எதற்கு இப்படி பெரியார் கூறுகிறார் என்றால், “ஒரு மொழியை மேம்படுத்திக் (Update) கொண்டே இருக்க வேண்டும்” என்கிறார். மன்னர் காலங்களில் போர் என்றால் வாளை வைத்து சண்டையிடுவார்கள். அந்த காலத்தைப் போன்றே தற்போதும் வாளை வைத்து சண்டை யிட்டால் சரியாக இருக்குமா ? எனவே நவீன காலங்களுக்கு ஏற்ப ஒரு மொழி மேம்பாடு அடைய வேண்டும் என்கிறார்.

பெரியாரின் மொழி குறித்த பார்வை மிக ஆச்சரியமாக இருக்கிறது. தமிழ்தேசியவாதிகள், திராவிடர்கள் என்றாலே கன்னடர்கள், தெலுங்கர்கள் என்கிறார்கள். ஆனால் பெரியார், ‘கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகியவைகள் தமிழே என்கிறார். மூன்றும் தமிழ் தான் அவைகள் தனித்தனி மொழி என்று நான் கருதவில்லை. ஏனென்றால், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் உள்ள வட மொழி சொற்களை எடுத்துவிட்டால் மீதமிருப்பது தமிழ் தான். பள்ளிக்கூடத்திற்கே பெரியார் போகவில்லை என்கிறார்கள் ஆனால் பெரியாரின் மொழி குறித்தான ஆராய்ச்சி நம்மை வியக்க வைக்கிறது. “நான்கு இடங்களில் நான்கு விதமாக தமிழைப் பேசுகிறார்கள். இதை வேறு மொழி என்று கூறுவது நியாயமா ?” என்று கேட்கிறார் பெரியார். இன்னும் சந்தேகமா? பெரியார், நமது மாநிலத்திலேயே தென் தமிழகத்தில் பேசும் மொழிக்கும், மேற்கு மாநிலத்தில் பேசும் தமிழுக்கும் வேறுபாடு இருக்கும் போது, பக்கத்து மாநிலத்தில் பேசுவதில் வேறுபாடு இருக்காதா? ஏன், பார்ப்பனர்கள் பேசக்கூடிய ‘நேக்கு, நோக்கு’ என்பது தமிழ் என்றால், ‘உனிக்கு, எனிக்கு’ தமிழ் ஆகாதா ? என்று பாமர மக்களுக்கு புரியும் வகையில் பெரியார் எழுதுகிறார். இது தான் பெரியாரின் மொழி குறித்தான பார்வை.

இனி பெரியாரின் தமிழ் மொழிக்கான தொண்டு குறித்து பார்ப்போம். பெரியார் தன்னை ஒரு மொழிக்கானவராகவோ, நாட்டிற்கானவராகவோ வட்டப் படுத்திக் கொண்டவர் அல்ல. இவையனைத்தையும் கடந்த மனிதநேயத்திற்காக வேலை செய்தவர். “ஒருவனுடைய கல்வி வளர்ச்சி என்பது, அவன் தாய் மொழியில் இருக்க வேண்டும்” என்கிறார் பெரியார். “அவரவர் தாய் மொழியில் கல்லூரி படிப்பையும், தொழிற் படிப்பையும் படிப்பதே சிறந்தது, என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம்” 22.11.1952 ஆம் தேதி விடுதலையில் இவ்வாறு எழுதியுள்ளார். கல்வி மட்டும் தாய் மொழியில் பயின்றால் போதுமா ? ஆங்கிலத்தில் உள்ள அறிவியல் நூல்களை இங்கிருக்கும் தமிழ்ப் பண்டிதர்கள் மொழி பெயர்த்து மலை மலையாக குவித்திருக்க வேண்டாமா ? எதற் கென்றால், தமிழில் அறிவியலை படிக்க வேண்டும் என்கிறார் பெரியார். இராமா யணத்தையும், மகாபாரதத்தையும் பாடமாக படித்து என்ன பயன்? இவையெல்லாம் செய்யவில்லையென்றால் எப்படி தமிழ் வளரும்?



**திருமணங்களை தமிழில் நடத்த வேண்டும் என்கிறார். கலியாணம், விவாஹம், கன்னிகாதானம் இவை எதுவுமே தமிழ் கிடையாது. தமிழரின் சொல் என்பது ‘வாழ்க்கைத் துணை நலம்’ என்று தான் குறளில் குறப்பிட் டிருக்கிறது. மற்ற மொழி சொற்களெல் லாம், பெண்ணை தாரை வார்ப்பது, வேசி போன்ற பெண்ணடிமைத் தனத்தை வலியுறுத்துகின்றன.**

தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றும் கூறுகிறார். தமிழை கல்லூரிகளில் பயிற்று மொழியாக்கிவிட்டீர்கள், மகிழ்ச்சி. ஆனால் இன்னும் ஏன் ஆங்கிலம் ஆட்சி மொழி யாக இருக்கிறது ? தமிழ் ஆட்சி மொழியாக இருந்தால் ஏழை எளிய மக்கள் பயன்பெறு வார்களே ! மேலும், கூறுகிறார், நீதி மன்றங் களில் தமிழை வழக்காடு மொழியாக வைக்க வேண்டும். அதற்கும் ஒரு உதாரணத்தை கூறுகிறார். ’குற்றவாளியாக இருப்பவருக்கு ஆங்கிலம் தெரியாது, நீதிபதியும், வழக்கறிஞரும் பேசிக் கொள்வது குற்றவாளிக்கு புரியாது. குறைந்த பட்சம் குற்றவாளி புரிந்து கொண்டு பதிலளிக்கிற அளவிற்காவது தமிழில் வாதாட வேண்டும். அதற்கு தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்கிறார் பெரியார். எனவே ஆங்கிலம் இருப்பதால் பாமர மக்கள் நீதியைப் பெறுவதற்கு நிறைய பணம் செலவு செய்ய வேண்டி இருக்கிறது. குறைந்தபட்சம் சட்ட புத்தகத்தையாவது தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்கிறார். இது தான் பெரியார்.

எவ்வளவோ தமிழ் புலவர்கள் இருந்தார்கள்; ஆனால் அவர்கள் அனைவருக்கும் கோவில், பூஜை, புனஸ்காரங்களின் மீது மட்டும் தான் கவலை இருந்தது. எந்த புலவர்களும் தமிழ் மக்கள் சார்ந்து கவனங்களை செலுத்தவில்லை.

மறைமலை அடிகளார் இருந்தார். தமிழ் மீது பற்றுள்ளவர் தான். வேதாச்சலனார் என்ற பெயரை தமிழில் மாற்றிக் கொண்டார். ஆனால் அவர் குறிப்புகளை ஆங்கிலத்தில் தான் எடுப்பார்.

பெரியார், மொழி வளர்ச்சி என்பது, அந்த மொழி பேசக்கூடிய மக்களின் சம்மந்தப்பட்டது என்று சிந்தித்தார்.

திருமணங்களை தமிழில் நடத்த வேண்டும் என்கிறார். கலியாணம், விவாஹம், கன்னிகா தானம் இவை எதுவுமே தமிழ் கிடையாது. தமிழரின் சொல் என்பது ’வாழ்க்கைத் துணை நலம்’ என்று தான் குறளில் குறப்பிட்டிருக்கிறது. மற்ற மொழி சொற்களெல்லாம், பெண்ணை தாரை வார்ப்பது, வேசி போன்ற பெண்ணடிமைத் தனத்தை வலியுறுத்துகின்றன. எனவே கலியாணம், விவாஹம், கன்னிகாதானம் போன்றவைகளால் தமிழரின் சுயமரியாதை இழக்கப்படுகிறது. சுயமரியாதை இயக்கத்திற்குப் பிறகு “சுயமரியாதை திருமணம்” நடைபெறு கின்றன. இணையர்கள் இருவரும் வாழ்க்கை துணைநல ஒப்பந்தத்தை தமிழில் வாசிக் கிறார்கள். அனைவருக்கும் புரியும் படியாகவும் இருக்கிறது. எனவே, சமஸ்கிருதம் இருந்த இடத்தை சுயமரியாதை திருமணம் மூலம் தமிழை கொண்டு நிரப்புகிறார்கள். 28.05.1928 அருப்புக்கோட்டை அருகில் உள்ள சுக்கிலநத்தம் எனற ஊரில் தான் முதல் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றதாக குறிப்பு இருக்கிறது. பெரியார் நடத்தி வைக்கிறார். இதில் நிறைய தமிழறிஞர்களும் கலந்து கொண்டனர்.

இவைகள் மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுங்கள் என்றும் கூறினார். திராவிட இயக்கம் செய்த சாதனைகளில் முதன்மையானது தமிழில் பெயர் வைப்பது தான். அதற்கு முன் வரை மனுதர்மத்தில் கூறியவாறு தான் பெயர்கள் இருக்கும். இங்கே இருக்கும் சூத்திரர்களுக்கு அடிமைத்தனத்தை குறிக்கக் கூடிய பெயர்களைத் தான் வைத்திருப்பார்கள். வீரமான பெயர்களை வைக்க முடியாது. சுயமரியாதை இயக்கத்திற்குப் பிறகு, தலித் மக்களுக்கு சுப்பையா, குப்புசாமி போன்ற பெயர்கள் வைக்கப்பட்டது. ஏனென்றால் இறுதியாக முடியும் சொல் அவர்களை மரியாதையாக அழைப்பதாக இருக்கும். ஆனாலும், ஆதிக்க ஜாதியினர், அவர்களை சுப்பா, குப்பா என்றே அழைத்தனர். இறுதியாக முடியும் அய்யா, சாமி போன்ற பெயர்களை சுருக்கி அப்படி அழைத்தனர். அதற்கும் ஒரு சில இடங்களில் ‘கும்பிடுகிறேன் சாமி’ போன்ற பெயர்களும் வைக்கப்பட்டன. எப்படி சுருக்கினாலும் மரியாதையாக அழைத்தாக வேண்டுமென்பதால். பெரியார் அதிலும் குறிப்பாக மதம் சம்மந்தப்பட்ட பெயர்களை வைக்கக் கூடாது என்றார்.

உலகிலேயே தமிழன் மட்டும் தான் இரண்டு மொழியில் பெயரை எழுதுகிறான். அதாவது தலைப்பெழுத்தை ஆங்கிலத்திலும், பெயரை தமிழிலும் எழுதுகிறான். இப்படி உலகில் யாரும் எழுதுவது கிடையாது. எனவே தலைப் பெழுத்தை தமிழில் போட வேண்டும் என்று கூறுகிறார். பெரியார் இறுதி வரையும் தன்னுடைய கையெழுத்தை ஈ.வெ. இராமசாமி என்று தமிழில் தான் போட்டார். கன்னடர் பெரியார், தமிழை காட்டு மிராண்டி மொழி என்று கூறிய பெரியார் இறுதி வரை முழுமையான தமிழில் தான் கையெழுத்தைப் போட்டார். மறைமலை அடிகளார் போன்று குறிப்புகளை ஆங்கிலத்தில் எடுக்கவில்லை.

சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு என்று கொண்டாடுகின்றனர். ஆனால் சித்திரை தமிழ்ப் புத்தாண்டு அல்ல; 60 ஆண்டுகளை சொல்கிறானே அதில் ஏதாவது ஒன்று தமிழ்ப் பெயர் இருக்கிறதா ? சரி தமிழ்ப் பெயர் தான் இல்லை. அவன் சொல்லும் கதையாவது அறிவுப்பூர்வமாக இருக்கிறதா ? வெளி நாட்டவரிடம் சென்று, எங்களது ஆண்டு பிறந்த கதை என்று கூறினால் நம்மை எப்படி அவர்கள் மதிப்பார்கள் ? எனவே தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு என்று பெரியார் கூறினார். திராவிடர் இயக்கம் மட்டும் தான் தை முதல் நாளை தமிழ் புத்தாண்டாக இன்று வரை கூறி வருகிறது. பல தமிழறிஞர்கள் சித்திரையைத் தான் தமிழ் புத்தாண்டாக கூறுகிறார்கள். சைவ மடத்தினர் இன்று வரை தை முதல் நாளை ஏற்றுக் கொண்டதில்லை.

திருக்குறளை பெரியார் ஆதரித்தார். விமர்சனங்கள் இருந்தாலும், 3% வடமொழி சொற்கள் இருந்தாலும் பெரும்பாலும் மனித சமூகத்திற்கு ஏற்ற நூலாக திருக்குறள் இருக்கிறது, என்கிறார் பெரியார். திருக்குறள் மாநாடு நடத்துகிறார். மாநாடு நடத்தியது மட்டுமல்ல மலிவு விலையில் பதிப்பித்தும் கொடுத்தார். பல இடங்களில் திருக்குறளை மேற்கோள் காட்டியும் பேசியுள்ளார். “குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்” என்ற குறள் பெரியாருக்கு மிக பிடித்தமான குறள்.

பெரியார், “நான் கேட்கக் கூடிய தமிழ், ஆரியம் கலக்காத தமிழ், சமஸ்கிருதம் கலக்காத தமிழ், ஆரிய சிந்தனை ஒழிந்து தமிழ் பண்பாடு மட்டுமே கொண்ட தமிழ், அது குறள் நெறி தமிழ்” என்கிறார். திருக்குறள் மாநாடுகளை ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடத்த வைத்தார். இவையெல்லாவற்றையும் விட தமிழர் உரிமைக்காக “தமிழ்நாடு தமிழர்க்கே” என்ற முழக்கத்தையும் முன் வைத்தார். வெறும் சொல்லாக நிற்காமல் தொடர்ந்து அதை பேசியும், எழுதியுமே வந்தார். தமிழ்நாடு தனி நாடாக மாறினால் தான், ஆரியர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடும், தமிழர்களின் உரிமை நிலை நாட்டப்படும் என்பதில் மிக உறுதியாக இருந்தார்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# விநாயகன் ஊர்வலம்: கோவை, சென்னை கழக சார்பில் காவல்துறையிடம் மனு






கோவையில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி அரசின் வழிகாட்டு நெறிமுறைகள், உயர்நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றக் கோரி கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 22.08.22 திங்கள் காலை கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை ஆணையர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது.

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி நடக்கும் ஊர்வலங்கள் மற்றும் சிலை அமைப்பது ஆகியவை குறித்து தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளையும் உயர்நீதிமன்ற தீர்ப்பை பின்பற்ற கோரியும், சுற்றுசூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பிளாஸ்ட் ஆஃப் பாரிஸ், சுட்ட களிமண் ஆகியவற்றால் செய்யப்பட்ட சிலைகளை நீர்நிலைகளில் கரைக்க கூடாது என்ற அரசாணையை சரியாக பின்பற்ற கோரி மனு அளிக்கப்பட்டுள்ளது

மனுவை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர், மாநகர ஆணையாளர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலை வைக்கப்படும் இடங்களில் சிசிடிவி கேமராக்கள் மற்றும் கோஷங்கள் போடுவதை வீடியோ பதிவு செய்வோம் நீங்கள் யாரேனும் விதிமுறை மீறல் சிலையை பார்த்தால் ஆதாரம் அனுப்புங்கள் அதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

அரசு ஆணையை மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்போம் என்று உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநகர தலைவர் தோழர் நேருதாஸ் தலைமையில் கழகத் தோழர்கள் நிர்மல்குமார், கிருட்டிணன், வெங்கட், மாதவன் சங்கர், இயல், துளசி ஆகியோர் கலந்து கொண்டனர்..

**சென்னையில் :** சென்னையில் 18.08.2022 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், விநாயகர் சிலைகளை நீதிமன்றத்தின் உத்தரவுகள், அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றி வைக்கவும், அதில் அரசியல் கட்சிகள் தலையீடு இல்லாமலும், பிளாஸ்ட் ஆஃப் பாரிஸ், சுட்ட களிமண் ஆகியவைகளை நீர் நிலைகளில் கரைக்க கூடாது போன்ற வழிமுறைகளை முறையாக பின்பற்றக் கோரி, சென்னை காவல் ஆணையர், மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய இடங்களில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் தலைமையில் மனு அளிக்கப்பட்டது.உடன்,சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, மயிலை சுகுமார், இராவணன், மனோகர், கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

## இட ஒதுக்கீடு இல்லாவிட்டால்...

இட ஒதுக்கீடு இல்லா விட்டால்... 45 மத்திய பல்கலைக் கழகங்களில் 45 துணை வேந்தர் இருக்காங்க... அதில் பட்டியல் சாதியை சேர்ந்தவர் எத்தனை பேர்? ஒரே ஒருவர்.

பழங்குடி எத்தனை பேர்? ஒரே ஒருவர். ஓ.பி.சி எத்தனை பேர்? ஏழு பேர். அப்ப மீதமெல்லாம் முற்பட்ட சாதியினர் 36 பேர். சதவீதமாகப் பார்ப்போமா?

எஸ்.சி - 2 %; எஸ்.டி - 2 %; ஓ.பி.சி - 16 %; முற்பட்ட சாதி - 80 %; (ஆதாரம் : எகனாமிக் டைம்ஸ் 08.08.2022 - நாடாளுமன்ற கேள்வி பதில் - கல்வி இணை அமைச்சர் சுபாஷ் சர்க்கார்)

இந்த கணக்கை சொன்னவுடன் ஒருவர் சொன்னார். துணை வேந்தர் பதவிக்கு தான் இட ஒதுக்கீடு இல்லையே! அது அநீதி என்று எப்படி சொல்ல முடியும்? என்றார்.

இட ஒதுக்கீடு இல்லாவிட்டால் என்ன அநீதி நடக்கும் என்பதற்குதான் இது என்றோம். அவரிடம் பதில் இல்லை.

நன்றி : 'தீக்கதிர்'

## வடநாட்டு ஊடகத்தை வறுத்தெடுத்தார், தமிழக நிதி அமைச்சர்

வடநாட்டு ஊடகத்தை வறுத்து எடுத்திருக்கிறார், தமிழ்நாட்டின் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன். தமிழ்நாட்டில் "இலவசங்கள்" என்ற பெயரில் மக்கள் நலத் திட்டங்கள் வழங்கப்படுவதை இப்போது விவாதப் பொருளாக்கியுள்ளனர். பிரதமர் மோடி இலவசங்கள் வழங்கப்படக் கூடாது என்ற கருத்தை அறிவித்திருக்கிறார்.

இது குறித்து நிதி அமைச்சரிடம் கேட்ட போது, "எங்களுக்கு அறிவுரை கூறுவதற்கு இவர்கள் என்ன பொருளாதார நிபுணர்களா ? பொருளாதாரத்தில் ஆய்வுப் பட்டம் பெற்றவர்களா ? பி.எச்.டி பெற்றவர்களா ? எங்கள் பொருளாதாரத்தை நிர்ணயித்துக் கொள்ள எங்களுக்குத் தெரியும், எங்களுக்கு அறிவுரை கூற உலகத்தரம் வாய்ந்த பொருளாதார நிபுணர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய ஆட்சி ஒன்றிய அரசிற்கு ஒரு ரூபாய் தருகிறது என்றால், ஒன்றிய ஆட்சி எங்களுக்கு 35 பைசா மட்டுமே திருப்பி தருகிறது. அதை வைத்துக் கொண்டுதான் நாங்கள் எங்களது நிதி நிலமை கட்டமைப்புகளை நாங்கள் சரி செய்து, மக்களுக்குத் தேவையான இலவசங்களை வழங்கி, பண வீக்கத்தையும் கட்டுக்குள் வைத்திருக்கிறோம். நான் கடவுள் நம்பிக்கையாளன் தான் . அதற்காக மோடி எனக்கு கடவுள் அல்ல. ஜெயலலிதா தொடங்கி வைத்த இலவச இரு சக்கர வாகனம் விநியோகத்திற்கு மோடி வந்து அதை வழங்கியது ஏன் ? அப்போது அது இலவசமாகத் தெரியவில்லையா ?" என்று அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டு அசர வைத்திருக்கிறார் தமிழ்நாட்டினுடைய நிதி அமைச்சர். இதன் மூலம் தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்த்திருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும்.

அதே நேரத்தில் இந்த இந்து ஆங்கில நாளேட்டில், திராவிட இயக்கத்தைச் சேர்ந்த புகழ் காந்தியினுடைய கட்டுரை ஒன்றும் விரிவாக வந்திருக்கிறது. அந்தக் கட்டுரை ஏராளமான தகவல்களை உள்ளடக்கியிருக்கிறது. பெரும் தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை, கடன் தள்ளுபடி இவைகளை வழங்குவதன் மூலம் கீழ் மட்டத்தில் இருக்கிற மக்களுக்கு பெரும் பயன்கள் கிடைக்கும், வேலை வாய்ப்புகள் பெருகும் என்ற கருத்து கூறப்பட்டு வருகிறது. இதை வன்மை யாக மறுக்கிறது இந்தக் கட்டுரை.

தமிழ்நாட்டிலிருந்து கிளம்பும் இந்த பதிலடிகளை வடநாட்டுக்காரர்கள், வடநாட்டு மோடிகள், வடநாட்டு பார்ப்பனர்கள், வடநாட்டு ஊடகங்கள் சந்தித்தாக வேண்டும். தமிழ்நாடு சுயமரி யாதையுடன் தலை நிமிர்ந்திருக்கிறது என்பதை வடநாட்டுக்காரர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.250
தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 26th August 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN